செய்தி வெளியீடு எண்:1045 நாள்:27.11.2008

# பொதுப்பணித்துறை அறிவிப்பு

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பூண்டி ஏரி நிரம்பி வருகிறது. பூண்டி ஏரியின் மொத்த கொள்ளளவு 35 அடி ஆகும். தற்போதைய நீரின் அளவு 33.02 அடி உள்ளது. நீர் வரத்து வினாடிக்கு 4600 கனஅடி ஆகும். பூண்டி ஏரியின் நீர் மட்டம் 34 அடியாக உயர்ந்தவுடன் நீர் திறந்து விடப்படும்.28.11.2008 விடியற்காலை 5 அல்லது 6 மணிக்கு தண்ணீர் திறந்து விடப்படும். தாமரைப்பாக்கம் காரமடை, மீஞ்சூர், நாபாளையம், எண்ணூர் வழியாக கொசதலையாற்றில் தண்ணீர் வெளியேறும். தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தலைமைப்பொறியாளர்

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.